<u>கரூர் மாநகராட்சி</u>

**2024ம் ஆண்டு அக்டோபர் 21ம்தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

**<u>பொருள்கள்</u>**

**1)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–1**ல் வார்டு எண்.**6**ல் கருப்பண்ணகோவில் மெயின் ரோடு எக்விடாஸ் பள்ளி முன்புறம் உள்ள சாலையில் மாநகராட்சி பாதாள சாக்கடை புதை வடிகால் மெயின் லையன் உள்ளது. மேற்காணும் இடத்தில் உள்ள பாதாள சாக்கடை மெயின் லைன் மனிதகுழி எண்.17 முதல் மனிதகுழி எண்.18 வரை உள்ள சுமார் 40 மீட்டர் நீளத்திற்கு 500 எம்.எம்.ஆர்.சி.சி பைப் அரிப்பு ஏற்பட்டு தற்சமயம் சாலையின் மத்தியில் முன் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. அதனால் கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு அபாயம் ஏற்படும் நிலையில் உள்ளதாலும் மற்றும் அருகில் பள்ளிக்குழந்தைகள் செல்லும் பாதையாகவும் உள்ளதாலும் மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள உடைந்த 500 எம்.எம் ஆர்.சி.சி பைப் லையனை மாற்றி புதியதாக 40 மீட்டர் நீளத்திற்கு புதிதாக மெயின் லைன் அமைக்கவும் மற்றும் சாலையினை சீர் செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. புதியதாக மெயின் லைன் அமைக்கவும் சாலையினை சீர் செய்யவும் தயார் செய்யப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.16,00 (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) செலவு செய்ய குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனமதிக்கலாம். **<u>(இ5/4937/2012)</u>**

**தீர்மான எண்: 2065** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**2)**கரூர் மாநகராட்சி மண்டலம் **–3** தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளுக்கு கட்டளை பழைய திட்டம் மற்றும் சணப்பிரட்டி குடிநீர் திட்டங்களுக்கு மூலக்காட்டானூர் நீருந்து நிலையத்திற்கு வரப்பெற்று பின்பு நீரேற்றம் செய்யப்பட்டு மண்டலம் 3க்குட்பட்ட பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பொதுமக்களுக்கு பதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு குளோரின் வாயு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது எதிர்வரும் மழைகாலத்தை முன்னிட்டு 900 கிலோ சிலிண்டர் குளோரின் வாயு வாங்கும் பணிக்கு முதன்முறையாக 06.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 5.25லட்சம்</u>

1. M/s.RK Enterprises. Kerala மதிப்பீட்டைவிட **0. 00** % மதிப்பீட்டு விலை விகிதத்தில்
2. M/s.Perfect Trading Company, Coimbatore மதிப்பீட்டைவிட 3.39%சதம் அதிகம்

அலுவலகக் குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1940, நாள்.08.08.2024ம் தேதி ரூ.5.25 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.RK Enterprises. Kerala அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ2/3858/2024)

**தீர்மான எண்: 2066** அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**3)**கரூர் மாநகராட்சி மண்டலம் **–4** தாந்தோணி பகுதிகளுக்கு கட்டளை KFW புதிய குடிநீர் திட்டம் மூலம் பொன்நகர் நீரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள Gas chlorination Plant மூலம் பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்குவதற்காக Chlorine Gas Refile செய்யும் பணிக்கு முதன்முறையாக **06.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 5.25லட்சம்**</u>

1. M/s.RK Enterprises. Kerala மதிப்பீட்டைவிட **0. 00** % மதிப்பீட்டு விலை விகிதத்தில்
2. M/s.Perfect Trading Company, Coimbatore மதிப்பீட்டைவிட 3.39%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**1941**, நாள்.**08.08.2024**ம் தேதி ரூ.**5.25** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.RK Enterprises. Kerala அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ2/3259/2024)

**தீர்மான எண்: 2067** அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**4)**அரசாணை நிலை எண்(எம்.எஸ்).27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.7), நாள்.22.02.2022ல் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022–2023 மற்றும் 2023–2024ம் ஆண்டின் கீழ் ரூ.1300.00 இலட்சம் மதிப்பீட்டில் இம்மாநகராட்சிக்குட்பட்ட மோகனூர் – வாங்கல் சாலை முதல் காமதேனு நகர் வழியாக புகளூர் நெடுஞ்சாலை வரை இணைக்கும் இணைப்பு சாலை (Link Road) அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி பங்களிப்பு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | அரசாணை விபரம் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மொத்த மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | திட்ட நிதி (ரூ லட்சத்தில்) | மத்திய அரசு நிதி(ரூ.லட்சத்தில்) | மாநில அரசு நிதி(ரூ லட்சத்தில்)ல்) | மாநகராட்சி பங்களிப்பு நிதி (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27/22.02.23 | I & A 2022-2023 | புகளூர் சாலை முதல் வாங்கல் சாலை வரை இணைக்கும் இணைப்பு சாலை | 1300.00 | I & A 2022-2023 Rs.400.00 & 2023-2024-Rs. 600.00 | – | – | 300.00 |
| | **Total** | | | **1300.00** | **1000.00** | | | **300.00** |

அதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.001/2022/டிஓ1, நாள்.06.03.2023ல் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றது.

மேற்படி இணைப்பு சாலை மோகனூர், நாமக்கல் சேலத்திலிருந்து கரூர் வழியாக ஈரோடு திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் செல்லும் வாகனங்கள் கரூர் நகரத்திற்குள் செல்லாமல் தற்போது அமைக்கப்பட்டுள்ள இணைப்பு சாலை வழியாக ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ள அண்ணா சாலை வழியாக தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்வதற்கு வாகன நெரிசல் தவிர்க்க ஏதுவாக உள்ளது.

மேலும் வாங்கல், பஞ்சாமாதேவி நெரூர், காட்டுப்புத்தூர், நாமக்கலிருந்து கரூர் செல்லும் வாகனங்கள் ஐந்து ரோடு வழியாக கரூர் நகரத்திற்கு செல்வது மிகவும் கூட்ட நெரிசலாகவும், காலதாமதம் ஏற்படுகிறது. எனவே புதிதாக அமைக்கப்பட்ட இணைப்பு சாலை வழியாக கரூர் நகரம் பேருந்து நிலையம், ரயில் நிலையம் செல்வதற்கு ஏதுவாகவும், குறுகிய நேரத்திற்குள் செல்வதற்கு ஏதுவாக உள்ளது. மேலும் கரூர் மாநகரிலிருந்து வெங்கமேடு வழியாக வாங்கல் , நாமக்கல், சேலம் செல்வதற்கு போக்குவரத்து நெரிசல் மற்றும் காலதாமதம் ஏற்படுவதற்கு மாற்று பாதையாக இணைப்பு சாலை பயன்படுகிறது.

மாமன்ற தீர்மானம் எண்.1929, நாள்.08.08.2024ல் கரூர் மாநகராட்சி பகுதியில் இயங்கி வரும் ஜவுளி ஏற்றுமதி தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் இரவு நேரங்களில் எந்த அச்சமும் இன்றி சாலையினை பயன்படுத்துவதற்கும் மற்றும் நாமக்கல், வாங்கல், நெரூர் ஆகிய பகுதிகளிலிருந்து வரும் பொதுமக்கள் கரூர் டவுனுக்குள் நுழைய இந்த சாலையை உபயோகப்படுத்துவதற்கு ஏதுவாக தெருவிளக்கு வசதி செய்வதற்கு மாநகராட்சி பொதுநிதியிலோ அல்லது அரசின் மானியம் மூலமாக பணியினை மேற்கொள்வதற்கு மண்டலம் –1 தலைவர் அவர்கள் முன்மொழிந்து 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாமன்ற தீர்மான எண்.2044, நாள்.30.09.2024ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இணைப்பு சாலையினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அப்பகுதியில் தெருவிளக்கு வசதி அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 09.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00லட்சம்**

1. M/s.Sankar Anand infra, Karur மதிப்பீட்டைவிட 0.09%சதம் குறைவு
2. Thiru.K.Ramesh, Karur மதிப்பீட்டைவிட 1.93%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.2044, நாள்.30.09.2024ம் தேதி ரூ.40.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sankar Anand infra, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரியமேயர்அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.(இ1/2720 /2023)

**தீர்மான எண்: 2068** அலுவலககுறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**5)** கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள தெருக்களில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சேதமடைந்த சாலையினை உடன் சீரமைக்குமாறு நகராட்சி

நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மண்டலம் –1 க்கு உட்பட்ட பழுதடைந்த சாலையினை பேட்ச் ஒர்க் செய்து செப்பனிடுவது மிகவும் அவிசியமாகிறது. எனவே பொதுமக்களின் அத்தியாவசிய பணிக்காக மேற்படி பகுதியில் பழுதடைந்த சாலையினை பேட்ச் ஒர்க் செய்து செப்பனிடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2024)**

**தீர்மான எண்: 2069** அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6)**கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.3 வி.வி.ஜீ நகர், காமராஜ் நகர், தில்லை நகர், கலைஞர் சாலை மற்றும் பூங்குயில் நகர் பகுதிகளில் உள்ள மழை நீர் வடிகால் மிகவும் சேதமடைந்து சாலை ஓரங்களில் கழிவு நீர் செல்வதால் மிகவும் சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் பழுதடைந்த மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களை அகற்றி புதிதாக மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.9.50 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2024)

**தீர்மான எண்: 2070**

7)கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையம் காவேரி ஆற்றிலிருந்து சுகாதாரமான குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு, வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை சீராக செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் காவேரி ஆற்றிர் நீர்வரத்து குறைவாக இருப்பதால் வரும் தண்ணீர் வடக்கு பகுதியில் மட்டுமே செல்வதால், வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தின் நீருந்து கிணற்றில் நீர் வரத்து குறைவதால் தொடர்ச்சியாக 120 எச்.பி மின்மோட்டார் இயக்க முடியவில்லை. எனவே வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தின் மேற்கு பகுதியில் சுமார் 4 கிலோ மீட்டர் துாரத்திற்கு இருந்து 210 Hittachi கொண்டு காவேரி ஆற்றில் தண்ணீரின் போக்கை மாற்றி வாய்க்கால் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2024)

**தீர்மான எண்: 2071**

**8)**கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட ஜவஹர் பஜார் பிரதான சாலை காமராஜ் சிலை முதல் சிவா டெக்ஸ் வரை உள்ள சென்டர் மீடியனில் 6 மின் கம்பங்கள் உள்ளது. இதில் 120 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் 12 எண்ணிக்கை உள்ளது. அந்த விளக்கிற்கான 2.5 ச.மி.மீ அலுமினியம் வயர்போடப்பட்டு சுமார் 20 வருடங்கள் ஆகிறது. மேற்படி வயர்கள் 280 மீட்டர் பழுது ஏற்பட்டு உள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு விளக்குகள் எரியாத நிலை உள்ளது. மேலும் இதே போன்ற வெங்கமேடு மேம்பாலத்தில் இருபுறமும் 120 வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் LR

எண்ணிக்கை உள்ளது. இந்த விளக்குகளுக்கு போடப்பட்டுள்ள 16 SQ UG Core அலுமினிய கேபிள் அமைத்து 17 வருடங்கள் ஆகிறது. மேற்படி கேபிள்களை UG 4 Core 16sqmm அலுமினிய கேபிள்கள் 600 மீட்டர் வரை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே பொதுமக்களின்நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள முதன்முறையாக 18.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்**

1. M/s.Vignesh Electricals, Trichy மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு
2. M/s.Star Engineering, Karur மதிப்பீட்டைவிட 1.46%சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1781, நாள்.29.02.2024ம் தேதி ரூ.5.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Vignesh Electricals, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ3/10847 /2023)

**தீர்மான எண்: 2072**

9)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், சிறுபாலம், அமைத்தல் மற்றும் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகு சாலை, இருபுறமும் மழைநீர் வடிகால், சாலை மையத்தடுப்பான்கள் மற்றும் மின்விளக்கு வசதிகள் அமைப்பதற்கு உள்ளிட்ட 48 பணிகளை மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி Infrastructure and Amenities fund 2020-2021ன்கீழ் ரூ.2400.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட 48 பணிகளை மேற்கொள்ள அரசாணை எண்.(நிலை) 23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.02.2021ல் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடுதொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1ல் கோதைநகர் மற்றும் கே.ஏ. நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 43.00 |
| 2 | வார்டு எண்.2ல் வேலுச்சாமிபுரம் குறுக்கு தெருக்கள், திருக்காம்புலியூர் மற்றும் வடிவேல்நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 44.00 |
| 3 | வார்டு எண்.3ல் வி.சி. நர்சிங் ஹோம் தெருமற்றும் எல்.ஜி.பி., நகர் மேற்கு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 38.00 |
| 4 | வார்டு எண்.4ல் வையாபுரிநகர் 1, 2 மற்றும் 3வது குறுக்குத் தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 36.00 |
| 5 | வார்டு எண்.5ல் செங்குந்தபுரம் குறுக்கு தெருக்கள்மற்றும் காமராஜபுரம் மெயின் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 36.00 |
| 6 | வார்டு எண்.6ல் நேதாஜிநகர், காயத்ரிநகர், சங்கர் நகர், பெரியகுளத்துபாளையம் மற்றும் சின்னகுளத்துபாளையம் ஆகிய | 41.00 |

| | | |
|---|---|---|
| | பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | |
| 7 | வார்டு எண்.7ல் அரசிநகர், புதுகுளத்துபாளையம், வள்ளுவர் தெரு, பிட்டர் பழனியப்பாதெரு மற்றும் மொட்டையப்பா கவுண்டர் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 41.00 |
| 8 | வார்டு எண்.8ல் அண்ணாதெரு மற்றும் அங்கப்பன் தெரு ஆகிய பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 30.00 |
| 9 | வார்டு எண்.9ல் கண்ணதாசன் தெரு, கே.எஸ்.பி., தெரு மற்றும் திருப்பூர் குமரன் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 41.00 |
| 10 | வார்டு எண்.10ல் அம்மன் நகர் குறுக்கு தெரு, ஜெ நகர், அறிவொளிநகர், ஜவஹர் நகர், காமராஜ் தெரு, நவீன் நகர் மற்றும் திருமலைநகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 42.00 |
| 11 | வார்டு எண்.11ல் தீரன் சின்னமலைநகர், டி.எச்.ஓ., தெரு, குமரப்பாகவுண்டர் தெருமற்றும் டி.எஸ்.பி., தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 49.00 |
| 12 | வார்டு எண்.11ல் பொன் செல்லப்பாதெரு, சுப்புகார்டன், சோழன் நகர் மற்றும் சத்தியமூர்த்தி தெருஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 13 | வார்டு எண்.12ல் அண்ணாசாலை, அம்மன் நகர், எஸ்.பி., காலனி, எம்.கே. நகர், கொங்குநகர், பிள்ளையார் கோவில்தெருமற்றும் சோளியம்மன் கோவில்தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 14 | வார்டு எண்.13ல் பெரியார் நகர், செங்குந்தர் நகர் குறுக்கு தெருக்கள், நேருநகர் மற்றும் வ.ஊ.சி., தெருஆகிய பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 15 | வார்டு எண்.14ல் பழைய போஸ்ட் ஆபீஸ் தெருக்கள், மற்றும் என்.எஸ்.கே, நகர் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 48.00 |
| 16 | வார்டு எண்.16ல் சர்ச் கார்னர் முதல் காமராஜ் மார்க்கெட் வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 45.00 |
| 17 | வார்டு எண்.17ல் ராமகிருஷ்ணபுரம் நிர்மலா மருத்துவமனை சாலை மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 18 | வார்டு எண்.20ல் கரூர் பழைய பைபாஸ் ரோடு முதல் கே.ஜி. மருத்துவமனை வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 42.00 |
| 19 | வார்டு எண்.20ல் சின்னஆண்டான் கோவில்ரோடு சந்திப்புமுதல் இண்டேன் கேஸ் கம்பெனி வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 20 | வார்டு எண்.21ல் பிரம்ம தீர்த்தம் ரோடு பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 21 | வார்டு எண்.22ல் கோபாலபுரம் பாலாஜி மெஸ் முதல் ரஜினிகாந்த் மருத்துவமனைவரையுள்ளபகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் | 50.00 |

| | | |
|---|---|---|
| | சிறுபாலம் அமைக்கும் பணி | |
| 22 | வார்டு எண்.23 மற்றும் 24ல் கருப்பாயி கோயில் இறக்கம் மற்றும் வ.உ.சி., தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 23 | வார்டு எண்.30ல் ஆதி மாரியம்மன் மெயின் ரோடுமற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 24 | வார்டு எண்.33ல் தொழில்பேட்டை மற்றும் சிலோன் காலனி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 25 | வார்டு எண்.36ல் இ.பி. காலனிரோடு குறுக்கு தெருக்கள்மற்றும் முத்து நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 26 | வார்டு எண்.36ல் அன்புநகர் மற்றும் ஜெ.ஜெ. கார்டன் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 27 | வார்டு எண்.36ல் ராம் சர்மாநகர் மற்றும் டி.என்.எச்.பி., காலனி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 28 | வார்டு எண்.39ல் கங்காநகர், காவேரிநகர் மற்றும் மலர் கார்டன் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 29 | வார்டு எண்.41ல் கே.கே. நகர் முதல் இடுகாடு வரை (Burial ground) உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 30 | வார்டு எண்.44ல் ராயனூர் பொன் நகர் முதல் திண்டுக்கல்ரோடு வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 31 | வார்டு எண்.48ல் அரசுகலைக்கல்லூாி மற்றும் வெங்ககல்பட்டி ஆகியபகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 46.00 |
| 32 | வார்டு எண்.44ல் பாரதிதாசன் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 40.00 |
| 33 | வார்டு எண்.37ல் காந்திகிராமம் ராமலிங்கநகர் மெயின் ரோடு மற்றும் திண்ணப்பாநகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 45.00 |
| 34 | வார்டு எண்.46ல் அம்மன் நகர் குறுக்கு தெருக்கள், செல்லாண்டிபாளையம் முதல் ராயனூர் ரோடு வரையுள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால்மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 35 | வார்டு எண்.47ல் காமராஜ் நகர், தென்றல்நகர், யசோதாநகர் மற்றும் முத்தலாடம்பட்டி குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 36 | வார்டு எண்.42ல் சாலைபுதுார் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 50.00 |
| 37 | வார்டு எண்.42ல் முத்துகவுண்டன் புதுார் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 49.00 |
| 38 | வார்டு எண்.39ல் தமிழ்நகர் மற்றும் சூர்யாநகர் ஆகிய பகுதிகளில் தார் சாலைஅமைக்கும் பணி | 44.00 |
| 39 | வார்டு எண்.40ல் கே.கே.நகர், வசந்தம் நகர், பாரதிநகர் மற்றும் தீரன் நகர் 3வது தெருஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 44.00 |
| 40 | வார்டு எண்.41ல் நேருநகர் 3வது தெரு மற்றும் பகவதியம்மன் நகர் 10வது தெருஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 44.00 |

| | | |
|---|---|---|
| 41 | வார்டு எண்.36 மற்றும் 42ல் வெங்ககல்பட்டி குறுக்கு சாலை, பவானிநகர், அன்புநகர் மற்றும் மலர் கார்டன் ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 45.00 |
| 42 | வார்டு எண்.4 மற்றும் 5ல் மகாத்மாகாந்தி சாலை மெயின் ரோடு பகுதியில் சாலை மேம்பாட்டுபணி | 50.00 |
| 43 | வார்டு எண்.5 மற்றும் 6ல் செங்குந்தபுரம் 12வது தெரு, காமராஜபுரம் வடக்கு மற்றும் பெரியகுளத்துபாளையம் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் சாலை மேம்பாட்டுபணி | 34.00 |
| 44 | வார்டு எண்.12ல் வாங்கபாளையம் முதல் லட்சுமிநகர் வரையுள்ளபகுதிகளில்குடிநீர் பகிர்மானகுழாய்அமைக்கும் பணி | 24.00 |
| 45 | வார்டு எண்.18ல் இரத்தினம் சாலை மெயின் பகுதியில் சாலை மேம்பாட்டு பணி | 18.00 |
| 46 | வார்டு எண்.21 மற்றும் 28ல் நரசிம்மபுரம் நடுத்தெரு மற்றும் பி பிளாட் ஆகிய பகுதிகளில் புதை வடிகால் குழாய் மற்றும் மனித ஆய்வுக் குழிஅமைக்கும் பணி | 24.00 |
| 47 | வார்டு எண்.42ல் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் அணுகுசாலை, சாலை மையத் தடுப்பான்கள்மற்றும் மின்விளக்கு வசதிகள்அமைக்கும் பணி | 190.00 |
| 48 | வார்டு எண்.42ல் தோரணக்கல்பட்டி பகுதியில் அமையவுள்ள கூடுதல் பேருந்து நிலையத்திற்கு செல்லும் பகுதியில் இருபுறமும் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்அமைக்கும் பணி | 197.00 |
| | மொத்தம் | 2400.00 |

மேற்காணும் ஒப்புதல் வழங்கப்பட்ட 48 பணிகளில் வ.எண்.47 மற்றும் 48ல் குறிப்பிட்டுள்ள இரண்டு பணிகள் மேற்கொள்ள இயலாத காரணத்தினால் அரசாணை (நிலை) எண் .164 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(மா.ந.4) துறை, நாள்.10.11.2022 மேற்கண்ட 2 பணிகளுக்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ.387.00 இலட்சம் மதிப்பீட்டினை ரத்து செய்து மீதமுள்ள 46 பணிகளுக்கான தொகை ரூ. 2013.00 இலட்சம் விடுவித்து உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒப்புதல் வழங்கப்பட்ட 46 பணிகளில் வரிசை எண்.9 மற்றும் 16ல் குறிப்பிட்டுள்ள 2 பணிகளுக்கான இடம் மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானதாகும். மாநில நெடுஞ்சாலைத்துறை மூலமாக மேற்படி பகுதியில் சாலை விரிவாக்கப்பணிகளும், மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. ஆதலால் மண்டலம் .1 வார்டு எண்.7ல் உள்ள கண்ணதாசன் தெரு, திருப்பூர் குமரன் தெரு, ஜோதிடர் தெரு, பிள்ளையார்கோவில் தெருக்களில் மழைக்காலங்களில் திட்டச்சாலை மெயின் ரோட்டில் உள்ள மழை நீர் வடிகாலில் அடைப்பு எற்பட்டு மேற்கண்ட தெருக்களில் உள்ள பொதுமக்களின் வீடுகளில் மழை நீர் செல்வதால் பொதுமக்கள் மிகவும் பாதிப்படைவதாக மாமன்ற உறப்பினர் மற்றும் அங்கு வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை தெரிவித்துள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட இரண்டு பணிகளுக்கான அதே மதிப்பீட்டுத் தொகை ரூ.41.00 +45.00 ஆக மொத்தம் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் மண்டலம் –1ல் கீழ்கண்ட இரண்டு பணிகளை மேற்கொள்வதற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடுதொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.7ல் குமரப்பகவுண்டர் தெரு முதல் பிள்ளையார் கோவில் வரை மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி (திட்டச்சாலை மெயின் ரோடு) | 45.00 |
| 2 | வார்டு எண்.8 மற்றும் 9 கணக்குப்பிள்ளைத்தெரு முதல் | 41.00 |

| | | |
|---|---|---|
| | குளத்துப்பாளையம் சாலை வரை மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி | |
| | | **86.00** |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/1243/2021)**

**தீர்மான எண்: 2073**

**10)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்களில் **31.07.2023** அன்று தீப்பிடித்து எரிந்துள்ளதால், தீயை அணைப்பதற்கான தீயணைப்புத் துறை வாகனங்களுக்கு தேவையானஅளவு தண்ணீர் வாங்குவதற்கு குடிநீர் லாரிகள், Hittachi இயந்திரங்கள், தீ அணைக்கும் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு தேவையான வசதிகள், இரவு நேரத்தில் வேலை செய்வதற்கு ஜெனரேட்டர், மற்றும் லைட் வசதிகள் ஆகியன ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால் அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**12.80** லட்சம் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **2022** பிரிவு **57(7)**ன் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை (சதவீகிதத்தில் ரூ ) |
|---|---|---|
| 1) | M/S.Shri Brindhavan Builders, Karur | 0.20%குறைவு |
| 2) | M/S.Sunmathi Construction, Karur | 1.71% அதிகம் |
| 3) | M/s,Sree Builders, Manaparai | 4.39% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/S.Shri Brindhavan Builders, Karur** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகைரூ.**12,57,457/—**ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம். **((இ1/2021)**

**தீர்மான எண்: 2074**

**11)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் **19.08.2023**ல் தீப்பிடித்து எரிந்துள்ளதால் தீயை அணைப்பதற்காகவும், தீயணைப்புத்துறை வாகனங்களுக்கு தேவையான அளவு தண்ணீர் வழங்குவதற்கு குடிநீர் லாரிகள், Hittachi இயந்திரங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு தேவையான வசதிகள் செய்யும் பணிக்கு மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **2022** பிரிவு **57(7)** ன் கீழ் ரூ.**4,40,000/—**மதிப்பீட்டில் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | M/s.Shr Brindhavan Builders, Karur | 0.18% குறைவு |

| | | |
|---|---|---|
| 2) | M/s.Sunmathi Construction, Karur | 2.97% அதிகம் |
| 3) | M/s.Sri Builders, Manaparai | 4.61% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Shr Brindhavan Builders, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங் கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ4,13,895/-மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/2024)

**தீர்மான எண்: 2075**

12) கரூர் மாநகராட்சி பொதுசுகாதரப் பிரிவு வாகன எண். TN47 AK0499 Tipper Lorry வாகனத்திற்கு தேவையான (8.25X20 Sm99-2TTF) அளவுள்ள உருளைகள் டயர்–2, டியூப் – 2 மற்றும் பிளாப் – கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிமிருந்து கோரப்பட்ட விலைப்புள்ளி கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளியின் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | Particulars Tyer | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | The Yes Pee Vee Tyres, No.25, Ramunajam Nagar, Karur- 639002. | Sri Bannari Amman Tyres. | Vela Tyres, No97/102, Old Bey-Pass Road, Karur-639001. |
| | | ரூ | ரூ | ரூ |
| 1 | 8.25X20 Sm99-2TTF டயர், டியூப் (ம) பிளாப் – 2 எண்ணம் | **27800** | **28000** | **28200** |

அலுவலகக் குறிப்பு,

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.27,800/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு வரப்பெற்ற குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள The Yes Pee Vee Tyre Karur, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம். (4233/2024/இ7)

**தீர்மான எண்: 2076**

13)கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TNAC 4720 Ramp Lorry வாகனத்திற்கு 2024–2025–ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுபிக்க தேவையான மராமத்து மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Joy Motors sml isuzu spares & service அவர்களின் நிறுவனத்திடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொண்டதையும். இதற்காக ஏற்பட்டுள்ள செலவினம் ரூ.150315/– (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து முன்னூற்று பதினைந்து மட்டும்) இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,

2. மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (1130/2024/இ7)

**தீர்மான எண்: 2077**

**14)**திரு.எம்.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி 5வது வார்டுக்குட்ப்பட்ட வெங்கமேடு பகுதியில் அமைந்துள்ள 1.அண்ணாசாலை 9வது கிராஸ் கடைசி பகுதியில் –1 மற்றும் 2.அண்ணாசாலை 4வது கிராஸ் சோழியம்மன் வடக்கு பகுதியில் –1 மற்றும் 3.சிட்டி கார்டன் பகுதியில் –4 ஆகிய பகுதிகிளில் தெருவிளக்கு இல்லாததால் இருள் சூழ்ந்து இருப்பதுடன் அப்பகுதியில் சில அசம்பாவிதங்களும் நடைபெறுகின்றது. ஆகையால் அப்பகுதிகளில் இருக்கும் பொது மக்களின் சிரமத்தை குறைப்பதற்கு புதிதாக மொத்தம் 6 மின்கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்: 2078**

**15)**திரு.எம்.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் மாநகராட்சி 5வது வார்டுக்குட்ப்பட்ட வெங்கமேடு பகுதியில் அமைந்துள்ள 1.அண்ணாசாலை 5வது கிராஸில் –2 மின்கம்பங்கள், 2.அண்ணாசாலை 9வது கிராஸில் –2 மின்கம்பங்கள் (தங்க நகர் ரோடு வரை) அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்

**தீர்மான எண்: 2079**

(ஒ/ம்) வெ.கவிதா
மாநகராட்சி மேயர்

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி